8

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
சட்டக் கற்றைகள் திணைக்களம்
சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மட்டம் 5
தொடர் மதிப்பீட்டு பரீட்சை I - 2023 /2024
LLU 5810 – காணிச் சட்டம்
காலம் - ஒரு (01) மணித்தியாலம்

---

திகதி : 05.11.2024 நேரம் : பி.ப. 03.30 - பி.ப. 04.30

---

ஒரு (01) வினாவிற்கு மாத்திரம் விடையளிக்குக.
**தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.**

1. விடுமுறைக்காக நாட்டை விட்டு செல்லும் முன்னர், நாத என்பவன் அவனது பழைய பள்ளி நண்பனான வாசு என்பவனை நுவரெலியாவில் உள்ள அவனது உடைமையை கவனித்துக்கொள்ளுமாறு வரவேற்றிருந்தான். நாத இலங்கைக்கு மீள்திரும்பிய பின்னர் சொத்தை கையளிப்பதற்கு வாசு இணங்கியிருந்தான்.

   2023 ஜனவரியில், நாத வெளிநாடு சென்றதுடன், அதன் பின் வந்த வாரம் வாசு தனது குடும்பத்தினருடன் நாதவின் உடைமையிலிருந்த பழைய வீட்டிற்குள் குடியமர்ந்தார். வாசுவின் மனைவி ரவி என்பவள், வீட்டின் முன் பகுதியில் ரோஜா மலர்களையும், மரக்கறிகளையும் பயிரிட்டிருந்தாள். வாசுவும் வீட்டின் மேல் மாடியில் இலத்திரனியல் காற்றாடி ஒன்றையும், சுவர் மின் விளக்குகளையும் பொருத்தினான். மேலும் வாசு தனது மகள் அனகிற்கான ஒரு வாசிப்பு அறையை ஏற்படுத்தவதற்கு சில நகரக்கூடிய புத்தக அலுமாரிகளையும் (Bookshelves) வாங்கியிருந்தான். வாசுவின் மகன் சுவஹஸ் , குளியல் அறையில் ஒரு சூடேற்றும் சாதனத்தையும் ( heater) பொருத்தியிருந்தான்.

   2024 இன் ஜனவரியில் நாடு திரும்பிய நாத, தனது நுவரெலிய உடைமையில் இருந்த வீட்டில் தான் வசிக்க விரும்புவதாக வாசுவிடம் தெரிவித்தான். நாதவின் வேண்டுகோளிற்கு அமைய வாசு சொத்தை விட்டு நீங்குவதற்கு தயாரானான். வாசு அவர்கள் வீட்டை விட்டு நீங்கும் போது அவர்களால் வீட்டிற்கும் உடைமைக்கும் ஏற்படுத்தப்பட்ட சகல விருத்திகளையும் திருத்தங்களையும் நீக்க திட்டமிட்டான். எவ்வாறாயினும் நாத அவர்களால் மேற்கொள்ளப்பட்ட சகல விருத்தியும் திருத்தங்களும் தற்போது வீட்டினதும் உடைமையினதும் ஒரு பாகம் என்றுரைத்து, வாசுவின் எண்ணத்தை எதிர்த்தான். வாசு உமது சட்ட அறிவுரையை நாடுகிறான். பொருத்தமான தீர்ப்புச் சட்டங்களை எடுத்துரைத்து வாசுவிற்கு அறிவுறுத்துக.

2. ***exceptio rei venditae et traditiae*** எனும் கோட்பாட்டினையும், இலங்கையில் அதன் பிரயோகத்தையும் ஆராய்க. உமது விடையை பொருத்தமான வழக்குகளால் ஆதாரப்படுத்த வேண்டும்.

(20 புள்ளிகள்)

*** பதிப்புரிமைபெற்றது ***